நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

**சி.சி 135/2021**

**2022ம் ஆண்டு ஜூலை மாதம் 21ம்** நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய **அ.சா. 1** வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி உமா, சுருக்கெழுத்து தட்டச்சர என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர | கோமதி | வயது: | 29 |
| த/பெ.(அ)க.பெ | கோவிந்தராஜ் | தொழில்: | இலலததரசி |
| ஊர் : | ஜோலார்பேட்டை | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை:

நான் இல்லத்தரசியாக உள்ளேன். நான் எனது அம்மா வீடான ஜோலார்பேட்டையில் உள்ளேன். எதிரி கோவிந்தராஜ் என் கணவர். 05.06.2017 அன்று எனக்கும், எதிரிக்கும் திருமணம் நடந்தது. அது பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நடந்த திருமணம். மேற்படி திருமணத்தின் பயனாக எனக்கும் எதிரிக்கும் இடையே 2018 ம் வருடம் 3வது மாதம் 17ந் தேதி எனக்கு முத்துராஜ் என்ற ஆண் மகன் பிறந்தான். திருமணத்தின் போது ஒரு லட்சம் பணமும், 10 சவரன் நகையும், பல்சர் வண்டி வாங்கி கொடுத்தார்கள். திருணமத்திற்கு ரூபாய் மூன்று லட்சத்தை எனது பெற்றோர் செலவு செய்தனர். என் கணவர் என் அண்ணனிடம் சென்று பணம் வாங்கி கொண்டு என்றும், என்னை சந்தேகப்பட்டும் கழுத்தை பிடித்து நெறித்து அடித்தார். பணம் வாங்கி வரச்சொல்லி என்னை கொடுமை செய்தார். என்னால் பணம் வாங்கி வரஇயலவில்லை. கடந்த 2019 ம் வருடம் என்னையும், என்னுடைய 4 மாத குழந்தையையும் எனது அம்மா வீட்டில் என் கணவர் கொண்டு சென்று விட்டுவிட்டார். நான் இதுகுறித்து அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். பின்னர் பேச்சுவார்த்தை நடத்தி அதன் முடிவில் என் கணவர் என்னை தன் வீட்டிற்கு அழைத்து சென்றார். பின்னர் மறுபடியும் ஒருமாதம் கழித்து மீண்டும் என் கணவர் என்னை எனது பெற்றோர் வீட்டில் விட்டுச்சென்றுவிட்டார். என் கணவர் பின்னர் என்னை பார்ப்பதற்காக என் பெற்றோர் வீட்டிற்கு வந்து சென்று கொண்டிருந்தார், இவ்வாறாக ஆறு மாதங்கள் வந்து சென்று கொண்டிருந்தார். அதன்பிறகு என்னை பார்க்க வரவே இல்லை. என்னுடைய அழை பேசி அழைப்புகளையும், எடுப்பதில்லை. பின்னர்

நிலைமையை கண்டுவர நானே ஏ்னனுடைய கணவரின் வீடான பெரிய குனிச்சி பனந்தோப்பிற்கு சென்றேன். வீட்டில் யாருமில்லை. பின்னர் நான் காரணத்தை தேடி அலையும் போது என் கணவரே என் அண்ணன் வினோத்குமாரின் வாட்ஸ்ஆப்பிற்கு தான் கந்தசாமி என்பவரின் மகள் சுபாஷினி என்பவரை திருமணம் செய்து கொண்ட போட்டோவை அனுப்பி வைத்திருந்தார். அதில் என் கணவரும் சுபாஷினியும் மாலையும் கழுத்துமாக நின்று கொண்டிருந்தனர். கடந்த 21.08.2020ந் தேதி மேற்கண்ட சுபாஷினியை என் கணவர் திருமணம் செய்து கொண்டுள்ளார். என் கணவர் அதன்பிறகு என்னை தொடர்பு கொள்ளவில்லை. ஆகவே, என் கணவர் 2வது திருணம் செய்து கொண்டதற்காக நான் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் என் கணவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் அளித்தேன். மேற்கண்ட புகார் அ.த.சா.ஆ 1 ஆகும். போலீஸார் நான் அளித்த புகார் சம்மந்தமாக என்னை விசாரித்தனர்.

எ.த.கு.வி:-

எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டது.

<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>

**<u>சி.சி 135/2021</u>**

**2022ம் ஆண்டு ஜூலை மாதம் 21ம்** நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய **அ.சா. 2** வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி)திருமதி உமா, சுருக்கெழுத்து தட்டச்சர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர | சசிகலா | வயது: | 34 |
| த/பெ.(அ)க.பெ | அன்பு | தொழில்: | டைலர் |
| ஊர் : | பால்னாங்குப்பம் | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை:

நான் பாலன்ாங்குப்பத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டெய்லராக உள்ளேன். அ.சா.1 எனது தங்கை. பெற்றோர்கள் பார்த்து நிச்சயித்து என் தங்கைக்கும், எதிரிக்கும் 05.06.2017ந் தேதி திருமணம் நடைபெற்றது. ஏன் தங்கைக்கு லேசாக காது கேட்காது. அந்த விவரத்தினை மாப்பிள்ளைக்கும், மாப்பிள்ளை வீட்டாருக்கு தெரிவித்து அவர்கள் ஒப்புக்கொண்ட பின்பு தான் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது 10 சவரன் தங்க நகை, சீர்சாமான்கள் மூன்று லட்சம் ரூபாய் செலவு செய்து திருமணம்செய்து வைத்தோம். மாப்பிள்ளை கேட்டுக்கொண்டதற்கிணங்க பல்சர் இருசக்கர வாகனம் வாங்குவதற்கு நாங்கள் எண்பதாயிரம் பணம் கொடுத்து மாப்பிள்ளை அதில் பல்சர் வாகனத்தை வாங்கி கொண்டார். திருமணமாகி 3 மாதங்கள் நன்றாக வாழ்ந்து வந்தனர். பின்னர் என் தங்கைக்கு காது சரியாக கேட்காது என்பதை ஒரு பிரச்சினையாக எடுத்துக்கொண்டு அவளை அடித்து சித்திரவதை செய்வது கழுத்தை பிடித்து அமுக்குவது போன்றவற்றை மாப்பிள்ளை கோவிந்தராஜ் செய்து வந்தார். நாங்கள் சீதனமாக கொடுத்த தங்க நகைகளை எதிரி கோவிந்தராஜ் ஸ்ரீராம் பைனான்ஸில் அடகு வைத்துவிட்டார். நகையை அடகு வைத்த பிறகு எதிரி கோவிந்தராஜ் பணம் கேட்டு என் தங்கையை தொந்தரவு செய்து வந்தார். அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒன்றரை லட்சம் ரூபாய் பணத்தை நாங்கள் கொடுத்தோம். நன்றாக பார்த்துக்கொள்வார் என்ற எண்ணத்தில் மேற்கண்டவற்றை செய்தோம். ஆனாலும், எதிரி என் தங்கையை கொடுமை செய்வது தொடர்ந்ததால் திருப்பத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். குழந்தை பிறப்பு செலவுகள் மற்றும் குழந்தையையும் தாயையும்,

எதிரியே கவனித்துக்கொண்டார். ஆனர்ல் குராந்தை பிறந்த அன்றே ஒரு சப்பாத்தி பிரச்சனையை காரணம் கூறி என் தங்கையை வற்புறுத்தி அன்றே மருத்துவமனையிலிருந்து டிஸ்ஜார்ஜ் செய்து அவர் வீட்டிற்கு அழைத்து சென்றுவிட்டார். பின்னர் குழந்தை பிறந்த மூன்று மாதத்திற்குள்ளாகவே எனது தங்கையை கொடுமை செய்து கழுத்தை பிடித்து அழுத்தி காலையிலிருந்து மாலை வரை அடித்துக் கொண்டே இருந்துள்ளார். எனது தங்கை அதிலிருந்து வீட்டை விட்டு வெளியே செல்ல முயற்சி செய்த போது கூட தலைமுடியை பிடித்து தரதரவென இழுத்து வீட்டிற்குள் கொண்டு சென்றுள்ளார். பின்னர் மீண்டும் என் அண்ணனிடமிருந்து இரண்டு லட்சம் பணம் வாங்கி வா என்று எதிரி வற்புறுத்தியதால் மறுபடியும் அனைத்து மகளிர் காவல் நிலையம், திருப்பத்தூரில் எனத தங்கை புகார் அளித்தார். நான் மேலே கூறிய அனைத்து விஷயங்களும், திருப்பத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளிப்பதற்கு முன்பு நடந்தது. அதன்பிறகு தான் அந்த புகாரின் அடிப்படையில் எதிரி என் தங்கையை சமாதானம் பேசி அழைத்து சென்றார். அதன்பிறகு மீண்டும் என் தங்கையை எங்கள் வீட்டில் வசதி இல்லை வீடு கட்டி முடித்த பிறகு அழைத்து செல்கிறேன் என்ற விட்டுச்சென்றார். அதன்பிறகு 5, 6 மாதங்களாக தாயையும், குழந்தையையும் பார்ப்பதற்கு எங்கள் வீட்டிற்கு அவ்வபோது எதிரி வந்து செல்வார். ஆனால் அதன் பிறகு வரவே இல்லை. அதன்பிறகு நாங்கள் எதிரி வீட்டிற்கு சென்று விசாரித்த போது எதிரி குடும்பத்தினர் யாரும் அங்கில்லை. எதிரி என் தம்பி வினோத்குமாரின் வாட்ஸ்ஆப் -க்கு போச்சம்பள்ளி ஊரை சார்ந்த கந்தசாமி மகள் சுாபஷினியை திருமணம் செய்து கொண்டு போட்டோவை அனுப்பி வைத்திருந்தார். அந்த போட்டோவில் எதிரியும், சுபாஷினியும், மாலை போட்டுக் கொண்டு தாலி கட்டிக்கொண்டு கணவர் மனைவி போல காட்சி அளிக்கிறார். எனவே, மேற்கண்ட குற்ற சம்பவத்திற்காக எதிரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டி என் தங்கை திருப்பத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். ஏன் தங்கையின் மகன் பெயர் முத்துராஜ் (வயது 4), தற்போது அவன் ஜோலார்பேட்டையில் அரசுபள்ளியில் யு.கே.ஜி படித்து வருகிறான். அவன் என் தங்கையின் ஆதரவில் தான் வளர்ந்து வருகிறான். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டது.